# தீவுப்பகுதியில் நள்ளிரவு பலத்த ஷெல் வீச்சு

ஊர்காவற்றுறை பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் சரவணை, புளியங்கூடல் பகுதிகளில் குடிமனைகளை நோக்கி நேற்று முன்தினம் நள்ளிரவுபலத்த ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனையடுத்து மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். ஷெல் சத்தம் ஓய்ந்ததும் மீண்டும் இவர்கள் தமது இருப்பிடங்களுக்குச் சென்றனர். ஆனால் மீண்டும் அதிகாலை ஷெல் தாக்குதல்களும், துப்பாக்கிப் பிரயோகமும் படையினரால் நடாத்தப்பட்டதையடுத்து அப்பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து யாழ் நகரப் பகுதிக்குள் வந்துள்ளனர். பாடசாலை ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்களும் அங்கிருந்து வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள், சில அலுவலகங்கள் தீவுப்பகுதியில் இதனால் இயங்க முடியவில்லை எனவும் தெரியவருகிறது. நேற்று மாலையிலும் ஷெல் சத்தங்கள் இப்பகுதியில் கேட்டதாக அங்கிருந்துவந்தவர்கள் தெரிவித்தனர். (19)


மக்களின் நாளேடு விலை ரூபா: 4 · 50

முரசொலி

முரசு 05 ஒலி 205 பிரசோற்பத்தி ஆனி 07 ( 21 - 06 - 1991 ) வெள்ளி


# இந்தியாவின் புதிய பிரதமராக நரசிம்மராவ் தெரிவாகினார்

## சரத்பவார் தாமாகவே போட்டியிலிருந்து விலகினார்

**இந்திரா காங்கிரஸ் கட்சியின் புதிய பாராளுமன்றக்குழுத் தலைவராக பி. வி. நரசிம்மராவ் (70) நேற்று பிற்பகல் தெரிவு செய்யப்பட்டார். இவர் இன்று பிற்பகல் இந்தியாவின் 9 ஆவது பிரதமராக பதவியேற்றுக் கொள்வார்.**

புதிய ஆட்சி அமைக்கும் தகுதியை இந்திரா காங்கிரஸ் பெற்றபோதிலும் அடுத்த பிரதமராக யாரை தெரிவது என்ற இழுபறி கட்சியினுள் எழுந்தது.

பி. வி. நரசிம்மராவுக்கும் இவரைவிட இளையவரான சரத்பவாருக்கும் இடையில் பிரதமர் பதவிக்கு இழுபறி காணப்பட்டது.

இந்நிலையில் நேற்றுமாலை காங்கிரஸ் கட்சியின் செயற்குழு இரண்டாவது தடவையாக கூடுவது எனத்திட்டமிடப்பட்டது.

கூட்டத்தில் பிரதமர் பதவியை யாருக்கு வழங்கலாம் என்பது குறித்து கட்சியினுள்ளேயே இரகசிய வாக்கெடுப்புநடாத்த திட்டமிடப்பட்ட போதிலும், கூட்டம் ஆரம்பமாவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பாக சரத்பவார் தாம் பிரதமர் போட்டியில் இருந்து விலகுவதாகவும் நரசிம்மராவையே தெரிவு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## எதிர்பார்த்த ஆதரவு இல்லை சரத்பவார் ஒதுங்கினார்

பிரதமராக வருவதற்கு சரத்பவார் கடைசி நிமிடம் வரை எடுத்த முயற்சிகள் பலனளிக்காத நிலையிலேயே பிரதமர் போட்டியில் இருந்து விலகினாராம்.

புதிதாக தெரிவான எம். பிக்களை சந்தித்து தமக்கு ஆதரவு வழங்கும்படி இவர் கேட்டுக்கொண்ட போதிலும் எதிர்பார்த்த ஆதரவு பவாருக்கு கிடைக்கவிலலை.

இந்நிலையில இறுதியில் தாம் கட்சி நிலைமையை கருத்திற் கொண்டு பிரதமர் போட்டியில இருந்து விலகுவதாக அறிவித்தார்.

## பிறந்ததினப்பரிசு

நரசிம்மராவ் தனது பிறந்த தினமான நேற்று இந்தியாவின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஜூன் 20 இலேயே நரசிம் மராவ் பிறந்தார்

## ஒன்பதாவது பிரதமர்! சில தகவல்கள்.....

இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராக பதவி ஏற்கவுள்ள பி. வி. நரசிம்மராவ் ஆந்திர மாநில கரிம் நகர பிராமணக் குலத்தைச் சேர்ந்தவர்.

மறைந்த பிரதமர்கள் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர்களின் அமைச்சரவைகளில் நரசிம்மராவ் உள்விவகார, வெளிவிவகார பாதுகாப்பு அமைச்சர் பதவிகளை வகித்தவர். ஆந்திராவின் முதலமைச்சராகவும் 1971 முதல்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அ. தி. மு. க செயற்குழு சென்னையில் கூடுகிறது

தமிழக சட்டப்பேரவையை பெரும்பான்மை பலத்துடன் கைப்பற்றியுள்ள அ. தி. மு. க இன்று சென்னையில் தனது செயற்குழு கூட்டத்தை நடாததுகிறது.

இக்கூட்டத்தில் புதிதாகசட்டப்பேரவைக்கு தெரிவானவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். செல்வி ஜெயலலிதா இக்கூட்டித்தில் புதிய முதலமைச்சராக பிரதிநிதிகளால் ஏகமனதாக தெரிவு செய்யப்படுவர்,

## உத்தரப்பிரதேசத்தில் பி.ஜே.பி. ஆட்சி அமைக்கிறது

உத்தரப்பிரதேசத்தில் முதற் தடவையாக பாரதிய ஜனதா கட்சி ஆட்சி அமைக்கிறது.

இக்கட்சி உத்தரப்பிரதேச சட்டப் பேரவையிலும் பாராளுமன்ற தொகுதியிலும் பெரும்பான்மை பலத்தை பெற்று ஆட்சியை அமைக்கிறது.

உத்தரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ராமஜென்ம

—04 ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவு பயணிகளிடம் உணவுப்பொருள் பறிமுதல்

நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி நேற்று படகில் வந்த பயணிகளைச் சோதனையிட்ட நயினாதீவு கடற்படையினர் அப்பயணிகள் கொண்டுவந்த உணவுப் பொருள்களை பறித்து கடலில் வீசியதாக தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவில் இருந்து இனிமேல் யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லக் கூடாது

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தீவுப்பகுதியில் உணவுக் கப்பல்

நயினாதீவு, நெடுந்தீவு கடற்பகுதியில் உணவுக்கப்பல் ஒன்று தரித்து நிற்பதாகவும் அதில் இருந்து பொருள்கள் இறக்கப்படுவதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (33)

## சைக்கிள் திருட்டு

வீட்டு வளவுக்குள் பூட்டி வைக்கப்பட்டிருந்த புத்தம் புதிய சைக்கிள் நள்ளிரவு நேரம் திருடப்பட்டுள்ள சம்பவம் ஆறுகால்மடத்தில் நேற்றுமுன்தினம், இடம்பெற்றுள்ளது. 33

## கொக்கட்டிசோலை கொலை சமசமாஜக் கட்சி கண்டனம்

கொக்கட்டிச்சோலையில் நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதை நவசமசமாஜக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் நிலவும் அரசியல் நிலமையை சாதகமாக கொண்டு பிரேமதாஸ அரசு கொலைகளை கட்டவிழ்த்துள்ளது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## புகழுடல் அஞ்சலிக்கு

நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் இராணுவத்தினருக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தி வீர மரணத்தைத் தழுவிக்கொண்ட வீர வேங்கைகளின் புகழுடல்கள் சுன்னாகம் சந்தை மைதானத்தில் இன்று காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் புகழுடல்கள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வீழ்த்தப்பட்ட ஹெலி மக்கள் பார்வைக்கு

வவுனியாவில்விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட ஹெலிகப்டரின் உறுப்புகள் இன்று காலை சுன்னாகம் மத்திய சந்தைக்கண்மையில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்படவுள்ளது.

விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்ட ஹெலியின் உறுப்புகள் வவுனியாவில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டது,

மணலாறு மாவட்டம்

## எல்லைப் பகுதியில் தாக்குதல் 19படையினர்பலி; ஆயுதங்கள் மீட்பு

மணலாறு மாவட்ட எல்லைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய அதிரடித் தாக்குதலில் 19 இராணுவத்தினர் பலியாகினர். இரு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

வெனம்பாவேவா எனும் பகுதியில் ரோந்து வந்த படையினர் மீது புலிகள் திடீரென நடாத்திய பலத்த தாக்குதலில் 19 படையினர் ஸ்தலத்திலேயே பலியானதாகவும் இரு படையினர் காயங்களுடன் 'தப்பியோடிவிட்' டதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

கொல்லப்பட்ட 19 படையினரின் ஆயுதங்கள் மற்றும் தொடர்புசாதனக்கருவிகளையும்புலிகள் கைப்பற்றிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பிறமொழி நீக்கித் தமிழில் எழுதுவோம்

| வடசொல் | | தமிழ்ச் சொல் |
|---|---|---|
| சமீபம் | — | அண்மை |
| சிரமம் | — | தொல்லை |
| சுதந்தரம் | — | விடுதலை |
| தத்துவம் | — | உண்மை |
| தந்தரம் | — | சூழ்ச்சி |
| தீர்க்கதரிசி | — | ஆவதறிவார் |
| துரோகம் | — | வஞ்சகம் |
| தேசம் | — | நாடு |
| நவீனம் | — | புதுமை |
| நஷ்டம் | — | இழப்பு |

(வளரும்)

★ ரஷ்யா, உகண்டா தூதுவர்களைப் போல

### லண்டனில் உள்ள இலங்கைத் தூதுவரையும்

# வெளியேற்ற நடவடிக்கை!

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளாஸ்ரோன் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதன் எதிரொலியாக லண்டனில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தை மூடிவிட பிரிட்டிஷ் அரசு ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் கொழும்பிலுள்ள தனது தூதுவராலயத்தையும் மூடிவிட பிரிட்டிஷ் அரசு ஆலோசித்து வருகின்றது. இதற்கு ஏதுவாகவே டேவிட் கிளாஸ்ரோனுக்குப் பதிலாக புதிய தூதுவர் ஒருவர் இதுவரை இங்கு அனுப்பப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு இது தொடர்பான நடவடிக்கைகளில் தற்பொழுது ஈடுபட்டு வருவதாகவும் தனது தூதுவர் ஒருவர் வெளியேற்றப்படும் பட்சத்தில் அதற்குப்பதிலாக அந்த நாட்டின் தூதுவரை வெளியேற்றும் நடைமுறையையே பிரிட்டன் இதுவரை பின்பற்றி வந்துள்ளதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே ரஷ்யாவிலும், உகண்டாவில் இடிஅமீன் ஆட்சிக்காலத்திலும் பிரிட்டிஷ் தூதுவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தமையும் அதற்குப் பதில் நடவடிக்கையாக பிரிட்டன் லண்டனிலிருந்து இவ்விரு நாடுகளினதும் தூதுவர்களை வெளியேற்றியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (74)

## பொம்மலாட்டப் பயிற்சி தீவுபகுதியில் இடம்பெற்றது

வேலணைக்கோட்ட ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கான பொம்மலாட்டக்கல்விப் பயிற்சிக் கருத்தரங்கு கடந்த 16, 17, 18 ஆம் திகதிகளில் புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தீவுப்பகுதியைச் சேர்ந்த முப்பதுக்கு மேற்பட்ட ஆரம்பக்கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்களும், ஆசிரிய ஆலோசகர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதி நிகழ்ச்சியான பொம்மலாட்ட கலைநிகழ்ச்சி 18 ஆம் திகதி பயிற்சியில் கலந்து கொண்ட ஆசிரியர்களினால் நடாத்திக் காட்டப்பட்டது. (78)

## பித்தப்பை கற்களை அகற்ற சத்திரசிகிச்சை தேவையில்லை

பித்தப்பை, ஈரல் என்பவற்றில் தோன்றும் கற்களை அகற்றுவதற்கு இனி உடலை வெட்டிக்கிழிக்க வேண்டிய தேவையில்லை.

லேசர் கதிர் மூலம் இந்தக் கற்களைப் பொடியாக்கி உடலிலிருந்து இலகுவில் அகற்றிவிடக்கூடிய புதியமுறையொன்றை இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் கே. ஜெகதீசன் (55) அறிமுகப்படுத்தியுள்ளார்.

## சுவீகரிக்கப்பட்ட தோட்டங்கள் மீண்டும் தனியாரிடம்

இவ்வருட இறுதியில் சகல ரப்பர், தேயிலைத் தோட்டங்களின் நிர்வாகம் மீண்டும் தனியாரிடம் கையளிக்கப்படவுள்ளன.

ஆனால் காணியின் சொந்தம் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடமே தங்கியிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உத்தேச புதிய மாற்றத்தின்படி தற்பொழுது மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் மாநில காரியாலயங்கள் மூடப்பட்டு நிர்வாகம் அனைத்தும் கம்பனிகளிடம் ஒப்படைக்கப்படுமெனவும், மாநிலக் காரியாலயங்களில் தொழில் புரிபவர்கள் அனைவரும் இந்தக் கம்பனிகளால் பொறுப்பேற்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

## இலங்கை கிரிக்கட் அணியில் முரளீதரனுக்கும் இடம்

அடுத்த மாதம் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள ரெஸட் கிரிக்கட் ஆட்டத்தில் இலங்கையின் சார்பில் ஆடுவதற்கு கட்டுகஸ்தொட்ட சென்ற் அந்தனிஸ் கல்லூரி மாணவன் முத்தையா முரளீதரனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அரவிந்த டி சில்வாவின் தலைமையில் இங்கிலாந்து செல்லும் குழுவில் இவரும் இடம்பெறுகிறார்.

சிறந்த பாடசாலை ஆட்டக்காரரானமுத்தையாமுரளீதரன் முதற் தடவையாக வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ளத் தெரிவாகியுள்ளதுடன் புதிய ரெஸட் வீரராகும் வாய்ப்பையும் இதன்மூலம் பெற்றுள்ளார்.

## இடம் பெயர்ந்தவர்களின் அட்டைகள் யாழ்செயலகத்தில் காத்திருக்கின்றன

தேசிய அடையான அட்டைகளைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்த சிலர், உரிய முகவரிகளில் இல்லாமையால், அவர்களின் அட்டைகள் மீண்டும் யாழ் செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தை வந்து சேர்ந்துள்ளன.

அண்மைக்கால அசம்பாவிதங்கள் காரணமாகத் தங்கள் இருப்பிடத்தை விட்டு இடம் பெயர்ந்து சென்று பிற இடங்களில் வசிக்கின்ற கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிகளைச் சேர்ந்த - தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்தவர்கள் தங்கள் அடையாள அட்டைகளை யாழ் செயலக ஆட்பதிவுத் திணைக்கள அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சுப்பிரமணியம் - இரத்தினதேவி, 81/5, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், செல்வி- லோகநாதன் - பிரதீபா - 23 பிரப்பங்குளம்வீதி, வண்ணார் பண்ணை, சோமசுந்தரம் ஜெகதீஸ்வரன் - 18, சிவன் பண்ணைவீதி, கொட்டடி, சிவசாமி - சாம்சன் - கிருபாகர் - 3 ஆவது கட்டையடி, ஆனைக்கோட்டை, முருகேசு தங்கவேலாயுதம் - ரவி ஊறணிக் குடியேற்றம் வல்வெட்டித்துறை, என். பிரோசியா பேகம் 57, 4 ஆம் குறுக்குத் தெரு, சோனகதெரு ஆகியோருடைய அடையாள அட்டைகளே விநியோகிக்கப்படாமல் இருக்கின்றன.

## தமிமீழ மீட்பு நிதி

### தெல்லிப்பளை

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர்பிரிவில் 22.6.91 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் ந.ப 12 மணிக்கும் இடையில் மீட்பு நிதி பெறப்படவுள்ளது. மீட்பு நிதி செலுத்த விரும்புவோர் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தெல்லிப்பளை வட்ட செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர்.

காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி, வறுத்தலைவிளான், மாவிட்டபுரம், தெல்லிப்பளை, கீரிமலை ஆகிய பகுதிகளிலிருந்து இடப்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்வோர் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்மாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சாவகச்சேரி

சாவகச்சேரி வட்டவையுள் அடங்கும் மீசாலை, சங்கத்தானை, சாவகச்சேரி, நுணாவில், மட்டுவில், சரசாலை, கைதடி, நாவற்குழி பகுதிகளில் உள்ள சகல சிற்றூரவைகளையும் சேர்ந்தவர்களிடமிருந்து 23. 06. 91 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் 11மணிக்குமிடையில்மீட்பு நிதிபெறப்படவுள்ளது. மீட்புநிதி செலுத்த உள்ளோர் சாவகச்சேரி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளர் செ. தமிழேந்தி கேட்டுள்ளார்.

### கட்டாக்காலி நாய்கள்

கட்டாக்காலி நாய்களை அழிக்கும் முயற்சியில் யாழ் மாநகரசபை சுகாதாரப் பிரிவு மீண்டும் இறங்கவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

முதலில் கொக்குவில், ஆனைக்கோட்டை, சுதுமலை, இணுவில், கோண்டாவில், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் நடவடிக்கையில் இறங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. (74)

## மன்னார்ச் செய்திகள்

### மடுவில் செயற்படுகிறது

மன்னார் நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தற்போது மடுவில் மடு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு அருகாமையில் இயங்கி வருகிறது. இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இவ்வலுவலகம்இடம்மாறியுள்ளது.

### மன்னாரில் நிவாரணம்

மன்னார்த் தீவில் 32ஆம் கட்ட நிவாரணங்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்டு விட்டன.

33, 34, 35, 36ஆம் கட்ட நிவாரணங்கள் விரைவில் வழங்கப்படஉள்ளன.

### காற்று இவர்களுக்குச்சாதகம்

மன்னார்த்தீவு பள்ளிமுனையில் இருந்து விடத்தல்தீவுக்கு படகுகளில் இப்போது இலகுவாகப் பயணம் செய்ய முடிகிறது.

இப்பயணத்திற்குக் காற்றுச் சாதகமாக இருப்பதே காரணம் ஆகும்.

அதே போன்று மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் சைக்கிள்கள் மூலம் இலகுவாகப் பயணம் செய்யக் காற்று உதவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### ஒரு வெற்றிலை ஐந்து ரூபா

மன்னார்த் தீவில் வெற்றிலைக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது.

ஒரு வெற்றிலை ஐந்து ரூபாவாக அங்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒருவெற்றிலைக் கூறு வாங்க ஆறுரூபா தேவைப்படுகிறது.

### பேசாலை முகாம் பொறுப்பாளர்

பேசாலை திறந்த வெளி அகதிகள் முகாம் பொறுப்பாளராகத் த. இராமலிங்கம் செயற்பட்டு வருகிறார்.

மன்னார் நகர உதவி அரசாங்க அதிபரான இவர் இவ்வாண்டு ஒக்டோபர்மாதம் 28ஆந் திகதிஇளைப்பாற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### செல்வி சரஸ்வதி நியமனம்

மன்னார் நகர உதவி அரசாங்க அதிபராகச் செல்வி சரஸ்வதி கணபதிப்பிள்ளை நியமனம் பெற்றுள்ளார். இவர் இம்மாதம் 3ஆம் திகதி தமது பதவியைப் பொறுப்பு ஏற்றார். (17)

## நாதஸ்வரப்பயிற்சிக்கல்லூரி குளியாப்பிட்டியில் அமைக்கப்படும்

நாதஸ்வரப் பயிற்சிக் கல்லூரி ஒன்றுகுளியாப்பிட்டியில் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்துசமய கலாசார அமைச்சு இந்த நாதஸ்வர பயிற்சிக்கல்லூரியை அமைக்கவுள்ளது.

பயிற்சிக் கல்லூரிக்கெனவிரிவுரையாளர்களும் இந்து சமய கலாசார அமைச்சினால் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

## ராணுவத்தினால் இந்துபுனிதஸ்தலங்கள் பாதிப்பு;

# இறைவனே காக்க வேண்டுமாம் அமைச்சர்!

மாவிட்டபுரத்தில் இராணுவம் முகாமிட்டு உள்ளதினால் இக்கோயில் பூசைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இது இப்பகுதி மக்களின் மத சுதந்திரத்தைப்பறிக்கும் செயலெனவும் மாவிட்டபுரம் ஆதீனகர்த்தர் பிரம்மஸ்ரீ து. சண்முகநாதக்குருக்கள் இந்துக்கலாசார அமைச்சர் பெ. தேவராஜுக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இதற்கு இந்து கலாசார அமைச்சர் "திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற இந்துப் புண்ணிய தலங்கள் பூட்டப்பட்டுள்ளன. உங்களுடைய ஆலயமும் பூட்டபப்பட்டுள்ளது. நீங்களும் இடம்பெயர்ந்துள்ளீர்கள். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் எல்லோரும் பிரார்த்தனை செய்வோம். இறைவன் எம்மைக் காப்பார் எனப்பதில் எழுதியுள்ளார். (ப-10)

★ சர்வதேச பத்திரிகையாளர் சங்கத்தலைவர் கண்டனம்

# பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த இலங்கை அரசு புதிய முயற்சி!

இலங்கையில் வெகுஜன தொடர்பு சாதனங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் தற்போதைய சட்டத்தில் திருத்த மொன்றைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கையில் அரசு அவசர அவசரமாக ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்காலத்தில் தொடர்பு சாதனங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றித் தயாரிக்கப்பட்ட புதிய சட்ட நகல் ஒன்று தற்பொழுது அரசியல் கட்சிகளின் பரிசிலனைக்கு விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த அரசு எடுத்திருக்கும் இந்த புதிய முயற்சியை சர்வதேச பத்திரிகையாளர் நிலையத் (ஐ.பி.ஐ) தலைவர் குஷ்ரோ ஈராணி கண்டித்துள்ளார். பத்திரிகைகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று அரசியல் கட்சிகள் மட்டும் தீர்மானித்துவிட முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

## துருப்பிடித்தலைத் தடுக்க வெங்காயச்சாறு போதும்!

வீட்டில் பொருள்கள் ஏதாவது துருப்பிடித்திருந்தால் வெங்காயத்தை இரண்டாக நறுக்கி அதன் மீது தேயுங்கள். துரு இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

பட்டுப் புடவைகளைப் பூச்சி அரிக்காமல் இருக்க வசம்பு, வேப்பங்கொட்டை இரண்டையும் இடித்து அவை வைக்கும் பெட்டியின் அடியில் தூவி விடுங்கள் - பூச்சிகள் அவற்றை அண்டமாட்டா.

## 17 கியூபா டாக்டர்கள் இலங்கையில் கடமையில்

பதினேழு கியூபா டாக்டர்கள் இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளில் மருத்துவ பணிகளில் ஈடுபட்டு வருவதாக கியூபா தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

இதுவரை ஒரு லட்சத்து எழுபது ஆயிரம் நோயாளர்களுக்கு இவ்வைத்தியர்களால் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதையடுத்தே வெளிநாட்டு வைத்தியர்கள் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## அடையாளம் காணப்பட்டார்

கடந்த வாரம் கிளிநொச்சி ஜெயந்திநகரில் இடம்பெற்ற விமானத்தாக்குதலில் மரணமான குடும்பப் பெண் மடுறோட் பெரிய குஞ்சுக்குளத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## யாழ் பல்கலைக்கழகத்தில் வரலாறு கற்பித்தல் கருத்தரங்கு

வரலாறு கற்பித்தல் சம்பந்தமான கருத்தரங்கும் செயலமர்வும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ் பல்கலைக்கழகப் புவியியல்துறை மண்டபத்தில் யாழ் கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் நடைபெற உள்ளன.

கோட்டங்களிலுள்ள 'சமூகக்கல்வி' ஆலோசகர்களையும், வரலாறு கற்பிக்கக் கூடிய ஆசிரியர்களையும் இக் கருத்தரங்கில்பங்கு பற்றுமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இங்கு இலங்கை வரலாறு தொடர்பாக விரிவாக ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (78)

## ஆசிரிய ஆலோசகர் விவரங்களை கல்வித்திணைக்களம் சேகரிக்கிறது

சகல கோட்டக் கல்வி அலுவலகங்களிலுமுள்ள சேவைக்கால ஆசிரியர் தொடர்பான விவரங்களை உடன் திரட்டி அனுப்புமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் சகல கோட்டக் கல்வி அதிகாரிகளையும் பணித்துள்ளார்.

1991 இன் முன் நியமனம் பெற்ற ஆசிரிய ஆலோசகர்களினது விவரங்களைப் பாடவாரியாகத் திரட்டுமாறும் அத்துடன் அவர்களது பெயர், பாடம், சேவைக்கால ஆசிரியராக நியமனம் பெற்ற திகதி, இந்நியமனத்தின் போது அவரது கல்வித்தகைமை, நியமனத்தின் பின் அவர் பெற்ற கல்வித் தகைமை போன்ற விவரங்களையும் அனுப்புமாறும் ஒவ்வொரு கோட்டக் கல்வி அதிகாரிகளும் கேட்கப்பட்டுள்ளனர் (78)

## கலைச்செல்வன் சுற்றுப் போட்டி

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்தினரால் 19ஆம் திகதி புதன்கிழமை நடாத்தப்பட்ட மாவீரர் கலைச்செல்வன் ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கலந்து கொண்ட மாதகல் தெய்வா விளையாட்டுக் கழகம் வெற்றிகுற்றுக்கேடயத்தைத் தட்டிக் கொண்டது. இப்போட்டியில்இரண்டாவது இடத்தை காங்கேசன்துறை யங்றோயல் விளையாட்டுக் கழகம் பெற்றது.

## ஆசிரியர் பற்றாக் குறையுள்ள தீவகப்பாடசாலைகள் இணைக்கப்படும்

வேலணைக் கோட்டத்தில் நிலவிவரும் ஆசிரியர்பற்றாக் குறையை சமாளிக்கும் நோக்குடன் அங்கு இயங்கிவரும் சில பாடசாலைகளை தற்காலிகமாகஇணைத்து இயங்கவைக்கும் முயற்சி மேற்கொள்ளப் படுவதாக அறியப்படுகிறது.

இதன் பிரகாரம் குறிகாட்டுவான் அ.த.க. பாடசாலை, புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்துடன் தற்காலிகமாக இணைக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு 3 வரையுள்ள வகுப்புக்கள் புங்குடுதீவு, சிறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 5 வரை உள்ள வகுப்புக்கள் புங்குடுதீவு சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயத்திலும் நடாத்தப்படவுள்ளன.

இதுபோன்று மேலும் பல பாடசாலைகளிலும் தற்காலிக இணைப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது 78

# செய்தி உலகம்

## 'அதிர்ச்சி' இவைக்கும் தான்

ராஜீவ்காந்தியின் அகால மரணம் இந்திய மக்களை மட்டுமன்றி அகில இந்திய வானொலியையும் தூரதர்சனையும் 'அதிர்ச்சிக்கு' உள்ளாக்கிவிட்டது. ராஜீவ் காந்தி குண்டு வெடிப்பினால் கொலையுண்ட நேரத்தில் தூரதர்சனில் இரவு 11.15 மணிக்கு பறவைகள் பற்றிய விவரணப் படம் காட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து அடுத்தநாள் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. இந்த ஒளிபரப்பு நடைபெற்ற வேளை ராஜீவ் அகால மரணம் அடைந்து விட்டார். ஆனால் தூரதர்சன் அதை அறிவிக்க முனையவில்லை. இதே நேரம் ராஜீவ் கொலையுண்டதை இங்கிலாந்து தொலைக்காட்சி உடனடியாக அறிவிக்க, லண்டனில் உள்ள இந்தியர்கள் தங்களது உறவினர்களுக்கு அதைத் தேலைபேசி மூலம் தெரிவித்தனராம்

இதேபோன்று ஐந்தரை வருடங்களுக்கு முன்னர் இந்திரா காந்தி மரணமடைந்து பல மணித்தியாலங்களின் பின்னரேயே தூரதர்சன் அந்த மரணச் செய்தியை வெளியிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (74)

## அமெரிக்கா ரஷ்யா முன்னணியில்

ஆயுததளபாட ஏற்றுமதியில் அமெரிக்காவும், சோவியத் யூனியனும் முதலிடம் வகிக்கின்றன என்பது சர்வதேச சமாதான ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டில் 69 சதவீத ஆயுத ஏற்றுமதியை இந்த இரு வல்லரசுகளும் செய்துள்ளன. இதில் 55 வீதம் 3ஆவது மண்டல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. சோவியத்யூனியன் ஆயுத விற்பனையை கடன் அடிப்படையிலோ சலுகை வைத்தோ செய்வதில்லை. அங்குநிலவும் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக உடன் செலுத்தக் கூடிய பணத்திற்கே விற்பனை செய்கிறது.

## மொரார்ஜிக்கு இரு விருதுகள்

இந்திய அரசினால் வழங்கப்படும் உயர்ந்த விருதான 'பாரதரத்தினா' போன்று பாகிஸ்தானின் உயர்ந்த விருது நிசானி பாக்கிஸ்தான். பாக்கிஸ்தானின் இந்த உயர்விருது முதன்முதலாக ஒரு இந்தியருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த விருதைப் பெறத் தகுதியுடையவராக இந்திய முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய்தெரிவாகியுள்ளார். இந்த விருதைப் பெற மொரார்ஜி சம்மதித்த போதிலும் இந்திய அரசு தனது அதிருப்தியை வெளியிப்படையாகவே காட்டியுள்ளது. இதனால் மொரார்ஜி இந்தியஅரசினால் தனக்கு வழங்கப்பட்ட 'பாரதரத்தினா' விருதை நேரில் சென்று ஜனாதிபதியிடம் பெற மறுத்து விட்டார். (74)

## ரஷ்யாவில் அதிகரிக்கும் வன்செயல்

சோவியத்யூனியனில் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு கொலை, களவு, கற்பழிப்புப் போன்ற குற்றச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. 1990 ஆம் ஆண்டில் மட்டும் இருபத்தேழு லட்சம் குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என சோவியத் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

1990 இல் அங்கு பத்தாயிரம் கொலைகள் புரியப்பட்டனவெனவும்60,000 பேர் தாக்கப்பட்டுக் காயம் அடைந்தனர் எனவும் அறிவிக்கப்படுகிறது.

## குவைத்துக்கு திரும்புவோருக்கு விஸா வழங்கப் புதிய கட்டுப்பாடு!

வளைகுடாப் போரின் காரணமாகக் குவைத்திலிருந்து நாடு திரும்பியவர்கள் மீண்டும் அங்கு தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்வதற்கு முன்னர் இலங்கை தொழில் வாய்ப்புப் பணியகத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளுவோருக்கே மீண்டும் குவைத்துக்குச் செல்வதற்கான விஸா வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் தொழிலாளர்கள் வெளிநாட்டுத் தொழில் வழங்கு நிறுவனங்களினால் எதிர்காலத்தில் ஏமாற்றப்படுவதைத் தடுக்கும் ஒரு புதிய நடைமுறையே இது எனவும் தெரிவிக்கப்பட்டது.

## நிஸ்கோ அமைப்பு மூலமே சுயதொழில் முயற்சிகள்

சுயவேலை வாய்ப்பு சம்பந்தமான நடவடிக்கைகள் நிஸ்கோ அமைப்பின் மூலமே மேற்கொள்ளப்படல் வேண்டுமென அரசு பணித்துள்ளது.

சுயவேலை வாய்ப்புக்கான பயிற்சி, நிதி உதவி, வேலை வாய்ப்பு உட்பட பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வரும் சகல நடவடிக்கைகளும் இதன்படி நிஸ்கோ அமைப்பின் மூலமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1990 டிசம்பர் 31க்குப் பின் ஆரம்பிக்கப்பட்ட சகல சுய தொழில் திட்டங்களிலும் இத்தீர்மானத்தைத் தீவிரமாகக் கடைப்பிடிக்குமாறு சகலஅரச அதிபர்களுக்கும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சு பணித்துள்ளது. (78)

## விதவைகள், ஊனமுற்றவர்கள் சுயதொழிலை ஆரம்பிக்க உதவி

ஊனமுற்றவர்களுக்கும், விதவைகளுக்கும் சுய தொழில் ஆரம்பிப்பதற்கான உதவிகளைஇலங்கைசெஞ்சிலுவைச் சங்க யாழ் பிரிவு வழங்கவுள்ளது

கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

இவர்களின் வறுமை நிலையைப் போக்க சுய தொழில் உதவித் திட்டம் பெரிதும் பயன்படுமெனத் தாம் எதிர்பார்ப்பதாகச் செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

## டொனால்ட் கிண்ணப்போட்டி நாளை காலை ஆரம்பமாகும்

டொனால்ட் வெற்றிக் கிண்ண 50 ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ் மத்திய கல்லூரி அதிபர் போட்டியை ஆரம்பித்து வைப்பார்.

அன்று சென்றலைற்ஸ் கழகத்திற்கும் மானிப்பாய் பாரிஸ் கழகத்திற்குமிடையில்முதலாவதுபோட்டி நடைபெறும்.

# சீமெந்து நிறுவன ஊழியருக்கு அரைச்சம்பளம் கிடைக்கும்

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனம் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்க மறுத்ததையடுத்து தொழில் நீதி மன்றத்தில் செய்த புகாரை விசாரிக்க தொழில் ஆணையாளர் ஊழியர்களை வேலை நீக்கம் செய்ய முடியாது எனவும் அரைச்சம்பளம் வழங்குமாறும் பணித்துள்ளதாக தெரியவருகிறது.

எனினும் இது குறித்து கொழும்பிலிருந்து உத்தியோகபூர்வ அறிக்கைகள் எதுவும் இன்னமும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 48

# தெற்கில் வெள்ள அகதிகளுக்கு பல்வேறு உதவிகள் கிடைக்கும்

தெற்கில் அண்மையில் பெய்தமழை, காற்றினால் வீடுகளை இழந்தவர்களுக்கு உடனடியாக 5 ஆயிரம் ரூபா வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்தொகையை 10 ஆயிரமாக உயர்த்த அமைச்சரவையின் சிபார்சுக்கு விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் வடக்கு கிழக்கில் விமானத்தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு வீடுவாசல்களை இழந்தவர்களுக்கு எவ்வித உதவியும் வழங்கப்படவில்லை.

அத்துடன் வெள்ளம் காரணமாக வீடுகளை இழந்தவர்களுக்கு வாராந்தம் நிவாரண உணவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்கொழும்புச்செய்திகள்கூறுகின்றன.

வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்குவதை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. (13

# மாநகர சுகாதாரப் பகுதி முதலுதவி பயிற்சி வகுப்பு

யுனிசெப் திட்டத்தின் கீழ் யாழ்மாநகரசபை சுகாதாரப் பகுதி முதலுதவிப் பயிற்சி வகுப்புகளை நடாத்திவருகிறது.

எழுபதுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுவதாகவும், பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் தாய்மாருக்கான கருத்தரங்கும் இடம்பெறுவதாகவும் சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன 74

# ஆலய நிர்வாகம் மாற்றம்

கடந்த முன்னூறு வருடங்களாகத் தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தில் இருந்து வந்த புங்குடுதீவு பெருக்காடு கிராஞ்சியம்பதி சுந்தரமூர்த்தி கோயில் இம்மாதம் முதல் பொதுமக்களினால் பரிபாலிக்கப்பட்டு !வருகின்றது.

இக்கோயில் நிர்வாகத்திற்கென 21 பேர் கொண்ட நிர்வாகசபை பொதுமக்களினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 78

# வன்னிப்பகுதி மக்கள் மடு அகதி முகாமில் தஞ்சம்

வவுனியா- பூவரசங்குளம் சின்னத்தம்பனை பகுதியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளையடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பலர் மடுப்பகுதியில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளதாகவும் இதனால் மடு அகதி முகாமில் பல வசதியீனங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இப்பகுதியில் ஒரே ஷெல் தாக்குதல்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (33, 79)

# புங்குடுதீவுக்கப்பால் வழிப்பறித் திருடர்கள்

புங்குடுதீவுக்கு அப்பால் மறைந்திருந்து பயணிகளிடம் திருடும் கோஷ்டி கடந்த சில தினங்களாக நடமாடி வருகிறதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவுப் பகுதிகளுக்கு குறிகாட்டுவான் துறையூடாகச் சென்று வரும் பயணிகளிடமே இந்த திருட்டுக்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வழிப்பறித் திருடர்கள் பகலில் தமது கைவரிசையைக் காட்டுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது (78)

# வெங்காய இறக்குமதிக்கு ஆவணிமுதல் தடைவரும்

இவ்வாண்டு ஆவணி மாதம் முதல் வெங்காயத்தின்இறக்குமதி தடைசெய்யப்படும் என்று விவசாய ஆராய்ச்சி அமைச்சர் தர்மதாசாபண்டா தெரிவித்துள்ளார்.

வடபகுதியிலிருந்து வெங்காயம் தற்போதைய சூழ்நிலையில் தென்பகுதிக்கு போகாததையடுத்து வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டது.

அத்துடன் தெற்கில் வெங்காயச் செய்கையை அரசு ஊக்கிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. இதனால் தெற்கில் வெங்காய அறுவடைகாலம் கிட்டியுள்ளதால் இத்தடையை மேற்கொள்ளப் போவதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன

இதேபோல தெற்கின் சில பகுதிகளில் துவரம்பருப்பு செய்கை அதிகரிக்குமானால் மைசூர் பருப்பின் இறக்குமதியும் குறைக்கபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, 33

## நெடுந்தீவு...

என கடற்படையினர் தடைவிதித்துள்ளதாகவும் பயணிகள் தெரிவித்தனர்

நீண்ட நாள்களுக்குப் பின்னர் நேற்று பயணிகள் படகுச்சேவை குறிகாட்டுவானுக்கு நடைபெற்றது. 78

### இடதுசாரி, தேசிய முன்னணி கட்சிகள்

# எதிர்க்கட்சியாக செயற்பட்டு காங்கிரஸ்ஆட்சிக்குவழிவகுக்கும்

இடதுசாரி கட்சிகளும் தேசிய முன்னணி கட்சியும் தாம் புதிய பாராளுமன்றத்தில் எதிர்கட்சியாக செயற்படவே முடிவுசெய்துள்ளனர்.

நேற்று புதுடில்லியில் இரு கட்சிகளினதும் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

எனினும் பெரும்பான்மை பலமற்ற காங்கிரஸ் ஆட்சியை அமைக்க இக்கட்சிகள் தமது ஆதரவை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன.

# ஹெரோயின் கடத்தல் ஒரு லட்சம் ரூபா பிணை

மூன்று கிலோ ஹெரோயின் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட முஸ்லிம் வாலிபர் ஒருவரை மேல் நீதிமன்றம் ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தது.

இந்த நபர் வெளிநாட்டில் இருந்து வரும்போது அவரது பையில் போதைப் பொருளை மறைத்துக்கொண்டு வந்ததால் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

தன்னைப் பிணையில் விடுமாறு இவர் மேல் நீதிமன்றத்திற்கு மனுச் செய்ததை அடுத்தே இந்த உத்தரவு வழங்கப்பட்டது. 50

## உத்தரப் பிரதேசத்தில்...

பூமி விவகாரத்தில் பாரதிய ஜனதா கொண்டுள்ள நிலைப்பாட்டை அப்பகுதி மக்கள் ஆதரிப்பதையே இது காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# டுபாயில் இலங்கைப் பெண் அடித்துக் கொலை

டுபாயில் பணிபுரியும் இலங்கைப் பெண்மணி ஒருவரை அங்குள்ள அரபு ராணுவச்சிப்பாய் அடித்துக் கொன்றதாக வெளிவிவகார அமைச்சுக்குத்தகவல் வந்துள்ளது.

இலங்கை வாலிபர் ஒருவருடன் இப்பெண் கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு இச்சிப்பாய் இவரை அடித்ததாகவும்தெரிவிக்கப்படுகிறது.

மூன்று பிள்ளைகளின் தயாரான இவரது சடலத்தை இங்கு தருவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 18

## இந்தியாவின்...

இதனால் காங்கிரஸ் செயற்குழு தனது நடவடிக்கைகளை இறுதி நேரத்தில் கைவிட்டு நரசிம்மராவை ஏகமனதாக தெரிவுசெய்தது.

இதனால் இரகஸிய வாக்கெடுப்பும் தவிர்க்கப்பட்டது.

புதிய பிரதமராக பதவி ஏற்கவுள்ள பி. வி. நரசிம்மராவ் பாராளுமன்ற உறுப்பினராக தற்போது இல்லை என்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

நரசிம்மராவ் தெரிவு செய்யப்பட்டது. சுதந்திர இந்தியாவின் பிரதமர் வரலாற்றில் முக்கியம் வாய்ந்த ஒன்றாக கருதப்படுகிறது.

தென்னிந்தியர் ஒருவர் இந்தியாவின் பிரதமர் பதவியை ஏற்பது இதுவே மூதற் தடவையாகும் (நரசிம்மராவ் ஆந்திரப்பிரதேச மாநிலத்தவர்)

காங்கிரஸ் ஆட்சியில் இந்தியா இருந்த போது நேரு குடும்பத்தவரை தவிர்ந்த வேறு ஒருவர் பிரதமர் பதவி வகிப்பது இது இரண்டாவது முறையாகும். லால்பகதூர் சாஸ்திரியே முதலாவது காங்கிரஸின் நேரு குடும்பம் அல்லாத பிரதமர்.

இதே சமயம் உத்தரப்பிரதேசம் தவிர்ந்த வேறுமாநிலத்தவர் ஒருவர் இந்தியப் பிரதமர் பதவியை ஏற்பதும் இது இரண்டாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

உத்தரப்பிரதேசத்தில் இம்முறை இந்திரா காங்கிரஸ் மூன்றாம் இடத்துக்கு பின் தள்ளப்பட்டு விட்டமைஇங்கு குறிப்பிடத்தக்கது.

பி. வி. நரசிம்மராவ் சில தினங்களில் தனது அமைச்சரவையை அறிவிக்கவுள்ளார்.

# வடமராட்சி கிழக்கிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

வடமராட்சி கிழக்கில் நேற்று அரசுக்கு எதிரான கண்டன ஊர்வலம் நடைபெற்றது.

அம்பன், குடத்தனை, நாகர்கோயில், செம்பியன்பற்று, மருதங்கேணி, பகுதியில் ஒரு ஊர்வலமும், சுண்டிக்குளத்தில் இருந்து உடுத்துறை, தாளையடி வரையுள்ள பகுதியில் மற்றொரு ஊர்வலமும் நாடத்தப்பட்டது.

இரு பிரிவினரும் மருதங்கேணிச் சந்தியை வந்தடைந்தனர் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

உலர் உணவு நிவாரண நிறுத்தம், பொருளாதாரத் தடை என்பவற்றைக் கண்டித்தே இந்த ஊர்வலம் நடைபெற்றது.

பல ஆயிரக்கணக்கான மக்கள் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது இதில் கலந்து கொண்டனர். (ப-86, 18)

# சுதந்திரக்கட்சி எம். பி. செய்திக்கு மறுப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. நிமல் ஸ்ரீ பாலடி சில்வாவின் மனைவி லெமனேட்டட் தாள் இறக்குமதியில் ஈடுபட்டதாக டெயிலி நியூஸ் பத்திரிகையில் வெளியான செய்தி முற்றிலும் தவறானது என அந்த எம். பி. பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் தனது மனைவி ஈடுபடவில்லை என்றும், டெயிலி நியூஸில் வெளியான செய்தி உண்மைக்கு மாறானவை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நானோ எனது மனைவியோ எந்த ஒரு பொருளையும் நாட்டுக்குள் இறக்குமதி செய்யவில்லை என்றும் தெரிவித்தார். 33

# வடபகுதி தபால் பொதிகள் கொழும்பில் தேக்கம்

யாழ் மாவட்டத்துக்குரிய உள்நாட்டு, வெளிநாட்டு தபால்கள் சிறுபார்சல்கள் என்பன கொழும்பு பிரதம தபாலகத்தில் தேங்கி கிடப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கே வரும் கப்பல்களில் இந்தத்தபால்களை கொழும்பில் உள்ள தபால் திணைக்கள அதிகாரிகள் கிரமமாக அனுப்புவதில்லையெனத் தெரிகிறது,

இதனால் வெளிநாட்டிலிருந்து உறவினர்களால் அனுப்பப்படும் காசோலைகள், மணியோடர்கள், ட்ராப்ற்றுகள் என்பவற்றை எதிர்பார்த்து பலர் இங்கு காத்திருந்து ஏமாற்றமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 33

# அபிவிருத்திசங்கம் அமைக்கப்படும்

நல்லூர் சங்கிலியன்தோப்பு ஜே/109 கிராமசேவையாளர் பிரிவில் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றை அமைப்பதற்கு அப்பிரிவு கிராமசேவை அலுவலர் ஆர். நவரத்தினராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 33

## ஒன்பதாவது...

1975 வரை இருந்தவர்.

1921 ஜூன் 20 இல் பிறந்த இவர் சுதந்திரபோராட்ட காலத்தில் காங்கிரசுடன் இணைந்து கொண்டார்.

இவருக்கு அண்மையில் தான் இருதய அறுவைச் சிகிச்சை நடந்து முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## கொக்கட்டிச்சோலை...

கொக்கட்டிச்சோலைக்கு பிரதமர் விஜேதுங்க சென்றமை வெறும் கண்துடைப்பு விஜயமே என் அக்கட்சி தனது கண்டனத்தில் குறிப்பிட்டுள்ளது.

## புகழுடல்கள்..

ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாக்கப்படும்.

சுதா (வைத்திலிங்கம் பரமலிங்கம், அராலி), கண்ணையா (வேலாயுதம் சிவகுமார், நீர்வேலி), ஆனந்தகுமார் (சங்கர் சுப்பிரமணியம் , மானிப்பாய்), குமார் (பரமன்-நாதன் திருமலை) ஆகிய போராளிகளின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட் லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி "லக்ஷ்மி" பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 21. 06. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.